1993 எப்ரல் 22]

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

428—

சங்ககிரி மலையிலுள்ள சமூக நலக்காடுகள்

*9510—டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரி மலையில் உள்ள சமூக நலக்காடுகள் சரிவர பராமரிக்கப்படவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைச் சரிவர பராமரிக்க மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா?

மாண்புமிகு திரு. சே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) சங்ககிரி மலையில் உள்ள காடுகள் வனத்துறையினரால் வளர்க்கப்பட்டவை அல்ல.

(ஆ) இந்த மலையில் பெரும்பாலான இடங்களில் மரங்கள் இல்லாததால், செடிகளை நடவு செய்து பராமரிக்க வனத்துறை அனுமதி கேட்டு, மத்திய அரசின் தொல்பொருள் ஆராய்ச்சி நிறுவனத்தினர் அனுமதியளிக்க முன்வராததால், இம்மலையில் வனத்துறை மூலம் செடிகள் நடவு செய்யும் பணி இதுவரையும் மேற்கொள்ளப்படவில்லை. இந் நிறுவனத்தாரின் அனுமதி கிடைத்தால் தான், இந்த மலையில் உகந்த மரவகைகள் நடுவதற்கு வனத்துறை நடவடிக்கைகள் மேற்கொள்ள இயலும்.

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. அக்கார்டிங் டு நேஷனல் ஃபாரஸ்ட் பாலிஸி மொத்த நிலப்பரப்பில் 33.33 சதவீத காடுகளாக இருக்க வேண்டும் என்பது கொள்கை, அந்தக் கொள்கையின்படி, நம்முடைய தமிழகத்தில் 17.45 சதவீதம் மட்டுமே காடுகளாக இருப்பதால், இந்த தேசியவனக் கொள்கையைப் பூர்த்தி செய்யும் வண்ணமும், அங்கே இருக்கும் பெண்கள் பயன்பெறும் வண்ணமும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களால் கொண்டுவரப்பட்டு இன்று 4,000 ஹெக்டேர் நிலப்பரப்பில் கையினால் விதை தெளிக்கும்

திட்டத்தின் கீழ் சங்ககிரி மலையில் மலை அடிவாரத்தில் எலிவேட்டட் ஏரியாவில் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூன்றில் ஒரு பகுதி வனத்துறையாக இருக்க வேண்டும் என்பது மத்திய அரசு கொள்கை. ஆனால் நம்முடைய தமிழகத்தை பொறுத்த வரையில் 17.45 சதவீதம் இங்கே இருக்கிறது. ஆகவே கூடுதலாக மலைப்பகுதியினை மாற்றியமைக்க முடியாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது. இந்தப் பகுதியிலே விதை தூவி அந்த மரங்களை வளர்க்க முடியுமா என்று கேட்டிருக்கிறார்கள். ஆனால் மத்திய அரசின் தொல்பொருள் ஆராய்ச்சி நிறுவனம் அதனுடைய கட்டுப்பாட்டிலே இருப்பதனால் அவர்களிடத்தில் அனுமதி கேட்டிருக்கிறோம், அனுமதி கிடைத்தவுடன் அந்தப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 429. திருமதி கே. மரியம் உல் ஆசியா, மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்.

429—

சென்னை நகரில் ஆட்டோக்களில் அதிகக் கட்டணம் வசூலிப்பதைத் தடுத்தல்.

*11416—திருமதி கே. மரியம் உல் ஆசியா:

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகரத்தில் ஆட்டோக்களில் சரியான மீட்டர்கள் பொருத்தப்படாமல் பொதுமக்களிடம் அதிகப்படியான கட்டணம் வசூலிக்கப்படுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

அரசு தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை நகரில் பெரும்பான்மையான இடங்களில் குறிப்பாக எழும்பூர் இரயில்